

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.10.2023) மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.10.2023) மதுரையில், உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார். அமைச்சர் பெருமக்கள் மற்றும் பழ. நெடுமாறன் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

# ‘நீட்’ தேர்வு விலக்கு இரண்டாம் கட்ட மாபெரும் கையெழுத்து இயக்கம்!

## திருவாரூரில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி தொடங்கிவைத்தார்!

திருவாரூர், நவ. 1-

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவ கனவு உள்ளிட்ட மேற்படிப்பு கனவுகளை தகர்க்கும் ஒன்றிய பி.ஜே.பி.அரசின் நீட் தேர்விலிருந்து மாணவர்களை காக்கும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் இரண்டாம் கட்ட நிகழ்வை உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் தொடங்கி வைத்தார்.

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., நெசவாளர் அணி மாநில செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எஸ்.குமார், மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர் டாக்டர். திவாகரன், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பகலவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டு கல்வித் தரத்தை உயர்த்தி தமிழ்நாடு கல்வியில் முதன்மைப் பெற்ற மாநிலமாய் திகழ வேண்டும் எனும் முன்னேடுப்போடு மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்களாலும் , திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தரும் இல்லம்தோறும் கல்வி, புதுமைப்பெண், இலவச பேருந்து,மகளிர் உரிமைத்திட்டம் போன்ற உன்னத திட்டங்களாலும் பெண்களும் கல்வியில் உயர்ந்துவரும் நிலையில், ஒன்றிய பி.ஜே.பி.அரசு தமிழர்களை அடிமைப் படுத்தும் நோக்கோடு, குலக் கல்வி முறையை கொண்டு வர தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவம் உள்ளிட்ட மேற்படிப்பு கனவுகளை தகர்க்கும் வகையில் கொண்டுவந்துள்ள நீட் தேர்வை ஒழிக்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களின் மேற்படிப்பு கனவை மெய்ப்பிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு , நீட் தேர்வுக்கு எதிரான மாபெரும் கையெழுத்து இயக்கத்தை சென்னையில் துவக்கி வைத்த நிலையில், அதன் இரண்டாம் கட்ட நிகழ்வு திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் நடைபெற்றது.

உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமை ஏற்று தொடங்கி வைத்த இந்த நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நெசவாளர் அணி மாநில செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எஸ்.குமார், மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர் டாக்டர். திவாகரன், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பகலவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இதில் பங்கேற்றனர்.

அப்போது கலைஞர் கோட்டத்தில் திரண்டு இருந்த ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் நீட் தேர்வின் ஆபத்து குறித்த அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் கருத்துரையை கேட்டு கலந்துரையாடினர். பின்னர் அங்கேயே நீட்தேர்வுக்கு எதிராக செல் போன் மற்றும் கணினி செயலியில் தங்கள் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் கையெழுத்தை பதிவு செய்தனர்.

### சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில்

# மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி: பரிசு வழங்கல்!

### எம்.எஸ்.ஹரிபாபு தலைமையில் - எஸ்.பாஸ்கரன் பரிசு வழங்கினார்!

சென்னை, நவ. 1 -

சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணர்களுக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.அரிபாபு தலைமையில் மாவட்டக் கழகப் பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்.சி. பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் தரமணிசென்னைமாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் ஆ.மாகதேவன் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட தலைவர் ஆர். ஜாரு_ஆனந்த்,துணைதலைவர் வெ.புருஷோத்தமன், மாவட்டதுணைஅமைப்பாளர்கள் ஆர்.சுரேஷ், எஸ்.மாரிமுத்து முன்னிலையில் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சென்னை தெற்கு மாவட்ட பொருளாளரும் 178வது மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி எஸ்.பாஸ்கரன்பரிசுவழங்கினார்.

அதுபோது 178 (அ) வட்டக் கழக செயலாளர் தே.கோபி, 178 வது வட்ட கழக செயலாளர் த.பார்த்திபன், மக்கள் குரல் நா.ஷாம்குமார், தலைமை ஆசிரியர் , ஆசிரியர் பெருமக்களும் , வட்ட கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாரூர் திரு.வி.க. அரசு கலைக்கல்லூரியில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டப்படவுள்ள இடத்தினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டார். மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகரச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகரச் செயலாளர் ஆகியோர் உடன் உள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள 29 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 17 சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை 3 பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டுள்ள பணிநாடுநர்களுக்கு 30.10.2023 அன்று நேரடிக் கலந்தாய்வு மூலம் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு நேற்று (31.10.2023) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியால் தலைமைச் செயலகத்தில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் ஜெ.குமரகுருபரன், மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா.ஆர்த்தி, பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி மற்றும் உயர் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### கோவி.செழியன் - உ.மதிவாணன் - எஸ்.கே.வேதரெத்தினம் பங்கேற்பு!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர் நவ. 1-

தஞ்சை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் இளைஞர் அணி செயலாளர் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது, நாடாளுமன்றத் தேர்தலில் கழக கூட்டணியின் வெற்றிக்காக அரும்பாடுபடுவது என பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டம் கும்பகோணம் மாவட்டக் கழக அலுவலகத்தில், அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், பாபநாசம் தொகுதி பொறுப்பாளர், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே. வேதரெத்தினம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோவி.அய்யாராசு, பொருளாளர் சாஸ்தா நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இதில் தலைமைச் செயற்குழு, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக இளைஞர் அணிச் செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் 27.11.2023 அன்று நடைபெற உள்ளதால் அன்றைய தினம் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர் இல்லங்களில் அறுசுவை உணவுகள் வழங்கியும் மற்றும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு போட்டிகள் நடத்தியும், ரத்ததானம் வழங்கியும், ஏழை மாணவ, மாணவிகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கியும் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதும் சுவர் விளம்பரங்கள் செய்தும், இனிப்புகள் வழங்கி கொடியேற்றி சிறப்பிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற இருக்கிற இளைஞர்கள் அணியின் மாநாட்டில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் அதிக அளவில் இளைஞர்களை பங்கேற்க செய்து சிறப்பிப்பது என்றும், ஊராட்சி வாரியாக எவ்வளவு இளைஞர்கள் பங்கேற்பார்கள் என்ற விபரத்தை மாநரக, ஒன்றிய, பேரூர்ச் செயலாளர்கள், மாவட்டக் கழகத்திடம் தெரியப்படுத்த வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடி (பூத்) வாரியான அந்தந்த வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி ஆகிய நபர்களை உள்ளடக்கி 100 வாக்காளர்களுக்கு ஒருவர் வீதம் ஒவ்வொரு பூத்திற்கும் பூத் கமிட்டி (BLC) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாக்காளர் சிறப்பு சேர்க்கை முகாம் மேற்கண்ட தேதிகளில் நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் மாவட்டக் கழகத்தின் சார்பில் பணிக் குழு அமைத்து வாக்காளர் பட்டியல் சரிபார்த்து முகாம் பணிகளுக்கு அனுப்பிவைக்க உள்ளோம். முகாம் நாட்களில் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதிச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், தங்கள் பகுதிக்குட்பட்ட வார்டு மற்றும் கிளை கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோருடைய துணையோடு தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய வாக்காளர் பட்டியலை சரிபார்த்து அந்தந்த வாக்குச்சாவடியில் உள்ளவர்கள் பெயர் பட்டியலில் வந்துள்ளதா என்றும், இடமாறுதல் செய்துள்ளவர்கள், இறந்தவர்கள், நிரந்தரமாக வெளியூர் சென்றவர்களை கண்டறிந்து அவர்களை நீக்கம் செய்வதுடன், புதியதாக திருமணம் ஆகி வந்தவர்கள், குடிமாறி வந்தவர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதுடன், மாவட்டக் கழகம் சார்பில் நியமிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை த்தலைவர்கள், தங்கள் அணியின் துணை அமைப்பாளர்களுடன் இணைந்து அந்தந்த வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று பூத் நிர்வாகிகள் (BLC), BLA2 ஆகியோர்களுடன் நேரில் கள ஆய்வு செய்து 01.01.2024 அன்று 18 வயது நிறைவடையும் புதிய இளம் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க தேவையான ஆவணங்கள், மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை தயார் நிலையில் வைக்க ஆயத்தப்படுத்துவதுடன், முகாம் நடைபெறும் நாளில் அவர்களை முகாமிற்கு நேரில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு அழைத்துச் சென்று அவர்கள் பதிவினை உறுதி செய்வதுடன், முகாம் நடைபெறும் நாட்களில் வாக்குச்சாடிக்குச் சென்று படிவம் 6, 6A, 7, 8 போன்ற மனுக்களின் விபரங்கள் சேகரிப்பதுடன் அன்றைய தேதியில் நமது கழகத்திற்கு ஆதரவு நபர்கள் எத்தனை பேர், புதியதாக வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்ற தகவலை தலைமைக்கு அனுப்ப ஏதுவாக மாவட்ட கழக அலுவலகத்திடம் ஒப்படைப்பதற்கு பட்டியல் தயார் செய்து அனுப்புவதுடன் முகாம் முடிவுற்றால் மேற்கண்ட தேர்தல் பணிகளை தொடர்ந்து செய்து புதிய வாக்காளர் சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களிலோ, வாக்காளர் சேகரிப்பதற்கான வட்டாட்சியர் அலுவலகத்திலோ, மனு கொடுக்கும் கால அவகாசம் 27.10.2023 முதல் 12.12.2023 வரை கொடுக்கலாம். எனவே, தஞ்சை வடக்கு மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், ஆகியோர்களை கண்காணிப்ப தற்கும், நேரில் சந்தித்து வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியை மேற்கொள்வதற்கும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர் முன்னிலை யில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழகத்திற்கு கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டு இந்த பணியின் விபரத்தினை மாவட்டக் கழக அலுவலகத்திடம் தெரிவிக்குமாறு இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தஞ்சை மண்டலத்தில் தகவல் தொழில்நுட்ப அணியில் சிறப்பாக செயல்பட்டதற்காக அணிச் செயலாளர் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விடம் நமது தஞ்சை வடக்கு மாவட்ட அணியினர் விருது பெற்றமைக்காக நமது மாவட்டக் கழகம் சார்பாக பாராட்டி மென்மேலும் சிறப்பாக செயல்பட வாழ்த்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 180 கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கி வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், நகரச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் உமா மகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.